ISO-14001 : 2004

நாமக்கல் நகராட்சி ஆணையாளர் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.கா.சென்னு கிருஷ்ணன், எம்.ஏ.,

தொ.மு.எண்.1500/2023/எப்1, நாள் :06.06.2023.

பொருள் : மனைப்பிரிவு – நாமக்கல் நகராட்சி – பெரியப்பட்டி சர்வே எண்கள். 406/1A, 5, 11A, 12A, 13, 407/1இல் 6.85 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கியது – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.830/2022/நாமா, நாள்.10.03.2023.
2. நகராட்சிப் பொறியாளர், நாமக்கல் அவர்களின் குறிப்பு, நாள். 12.04.2023
3. நகர்மன்ற தீர்மானம் எண்.294, நாள்.31.05.2023.

******

<u>உத்திரவு:-</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம் சர்வே எண்கள். 406/1A, 5, 11A, 12A, 13, 407/1இல் 6.85 ஏக்கர் பரப்பளவில் அமையும் உள்ள இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி தங்களால் நேரிடையாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதை, பார்வை–1இல் கண்டுள்ள நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும், தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பதற்கான மதிப்பீடுத் தொகை ரூ. 9,60,000/–யும் செலுத்துமாறு பார்வை–2இல் கண்டுள்ள குறிப்பில் நகராட்சி பொறியாளர் அவர்கள் தெரிவித்துள்ளார். அதன்படி, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பதற்கான மதிப்பீடுத் தொகை ரூ. 9,60,000/–ஐ நகராட்சி கருவூலத்தில் 13.04.2023 அன்று செலுத்தியுள்ளார். மேலும்,மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.68,500/– கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.1,000/– ஆகியவை நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்வை–3ல் கண்டுள்ள நகர்மன்ற தீர்மானத்தில் நகராட்சி பராமரிப்பிற்கு சாலைகள், வடிகால், ஆகியவை எடுத்துக்கொள்ளவும், இறுதி ஒப்புதல் வழங்கவும்

அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலைகள் பொது ஒதுக்கீடு இடங்கள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண்.5162/2022இன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை–1இல் கண்டுள்ள உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.இ.எண்.17/2023என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பார்வை–1இல் கண்டுள்ள செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு, பார்வை–3இல் கண்டுள்ள நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.

**இணைப்பு**

1. மனை உட்பிரிவு வரைபடம்.
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்

பெறுநர்:

திரு.K.மனோகரன் மற்றும் 12 நபர்கள்,
51–A6, K.K.நகர்,
மோகனூர் ரோடு,
நாமக்கல்.

**நகல்.** உதவிப் பொறியாளர், நாமக்கல் நகராட்சி – பொது உபயோக இடம் மற்றும் சாலைகளை, சாலைப்பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் பராமரிப்பு செய்யும் பொருட்டு.

**நகல்.** உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், நாமக்கல்– அவர்களின் தகவலுக்கு.

**நகல்.** வருவாய் ஆய்வாளர், நாமக்கல் நகராட்சி – காலி மனைகளின் மீது வரி விதிப்பு செய்யும் பொருட்டு.

**நகல்.** நகர சார் ஆய்வாளர், நாமக்கல் நகராட்சி, அவர்கள் ஒப்படை செய்யப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ள.

**நகல்.** நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வர், நாமக்கல் நகராட்சி.